பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 07 2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி தூத்துக்குடியில் இன்று, 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

2. தமிழகத்திற்கு 11 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை பிஜேபி தலைமையிலான அரசு வழங்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்த கோரிக்கை மனுவை, பிரதமரிடம், மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு வழங்கவுள்ளார்.

4. தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. லாகோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**--இனி விரிவான செய்திகள் - ---**

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தூத்துக்குடியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இரண்டு நாள் பயணமாக தமிழகம் வரும் பிரதமர், தூத்துக்குடி நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, இன்றிரவு திருச்சியில் தங்குகிறார்.

நாளை கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெறும் ராஜேந்திர சோழன் முப்பெரும் விழா நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்கிறார்.

பிரதமரின் வருகையையொட்டி, தூத்துக்குடி, திருச்சி, அரியலூர் மாவட்டங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்த கோரிக்கை மனுவை, பிரதமரிடம், மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு வழங்கவுள்ளார்.

பிரதமரிடம் அளிக்க வேண்டிய கோரிக்கை மனு குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மாநில தலைமைச் செயலாளர் திரு முருகானந்தத்துடன் ஆலோசனை நடத்தி, அதற்கு ஒப்புதல் அளித்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

தமிழகத்திற்கு கடந்த 11 ஆண்டுகளில் 11 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு வழங்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விமான நிலையம் 500 கோடி ரூபாய் மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

(Voice Byte - எல். முருகன் –69 Sec.)

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு பின்னர் முதல் முறையாக தமிழகம் வரும் பிரதமரை அனைவரும் வரவேற்க தயாராக உள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த நான்காண்டுகளில் தென்மாவட்டங்கள் சிறப்பான வளர்ச்சியை அடைந்திருப்பதாக கூறினார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படுவதால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்றும் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சியை காட்டிலும் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடு முழுவதும் 140-க்கும் மேற்பட்ட விமான நிலையங்கள், வந்தே பாரத் ரயில்கள் போன்ற ஏராளமான திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளதாக கூறினார்.

ராஜேந்திர சோழனின் புகழை உலகெங்கும் பரப்பியதற்காக பிரதமருக்கு மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு நன்றி தெரிவித்திருப்பதை திரு நயினார் நாகேந்திரன் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(Sound Byte - செந்தாமரை கண்ணன் –39 Sec.)*

<<<<<<<>>>>>>

இதனிடையே, தேனி மாவட்டம் வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக அந்த அணையின் நீர்மட்டம் 66 அடியை எட்டியுள்ளது.

இதனால் அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறந்துவிடப்படுவதால், தேனி, மதுரை உள்ளிட்ட ஐந்து மாவட்ட கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Sound Byte - ராஜ்குமார் –50 Sec.)*

இந்நிலையில், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அருவிகளில் குளிப்பதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Sound Byte – தருமபுரி தண்டபாணி– 40 Sec.)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூரில் ஏழு குளிர்சாதன பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு துரைமுருகன் தொடங்கிவைத்தார்.

---------------

சென்னை எழும்பூர் அரசு தாய்-சேய் நல மருத்துவமனையில் சுமார் 59 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் கட்டிடப்பணிகளை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருவாய்த்துறையின் சார்பில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம்களை ஆட்சியர் திரு தினேஷ்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

--------------

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலின் மாட வீதியில் அமைக்கப்படும் கான்கிரிட் சாலைப்பணிகளை பக்தர்களுக்கு இடையூறின்றி விரைந்து முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூய்மைப்பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆட்சியர் திருமதி சந்திரகலா தலைமையில் நடைபெற்றது.

-----------------

கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் முன்னாள் ராணுவத்தினர் நலச்சங்கம் சார்பில் தேசிய கொடி ஏந்தி பேரணி நடைபெற்றது.

-------------

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

லாகோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-7, 11-4, 11-13, 6-11, 11-9 என்ற செட் கணக்கில், பிரான்சின் Prithika-வை வென்றார்.

--------------

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான இன்று இந்திய தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 6 ரன் எடுத்துள்ளது.

மான்செஸ்டரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 358 ரன் எடுத்துள்ளது.

இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 669 ரன் எடுத்துள்ளது.

----------

*செங்கல்பட்டு மாவட்டம் ஒத்திவாக்கத்தில் நடைபெற்ற மாநில அளவிலான காவல்துறை துப்பாக்கிச்சுடும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு காவல்துறை தலைமை இயக்குனர் திரு சங்கர் ஜிவால் பதக்கம் மற்றும் பரிசுகளை வழங்கினார்.*

------------------

தென்னிந்திய அளவிலான நான்கு நாள் ஹாக்கிப்போட்டி திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் இன்று தொடங்கியது.

*<<<<<<<END>>>>>>*